1981 ஜனவரி 24]

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சிங்கனூர் பஞ்சாயத்துக்குட்பட்ட சாய்பாபா காலனியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு ரோடு போடுவதற்கு 2,000 ரூபாய் கொடுத்தால்தான் ரோடு போட முடியும் என்று அங்கிருக்கிற தனி அதிகாரி சொல்லுகிறார்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டு சொல்வதற்கு இது நேரமல்ல.

சென்னையில் சஞ்சய் காந்திக்குச்சிலை

*வினா எண் 35—திரு. என். எஸ. சித்தன்: மாண்புமிகு ள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் அமரர் சஞ்சய் காந்தி அவர்களுக்கு சிலை வைப்பதற்க்கு அனுமதி கேட்டு அரசிடம் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இதுபற்றி சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளின் கருத்து கோரப்பட்டுள்ளது. அவை கிடைத்தவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

எலத்தூர் மோட்டூர் தொழுநோய் தடுப்பு நிலையம்.

*வினா எண். 36—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் கலசபாக்கம் தொகுதியில் உள்ள எலத்தூர் மோட்டூர் கிராமத்தில் இயங்கி வந்த தொழுநோய் தடுப்பு நிலையம் போளூர் நகரத்திற்கு மாற்றப் பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில் அதன் காரணமென்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தற்காலிக மாக மாற்றப்பட்டுள்ளது.

(ஆ) 12—5—1980 அன்று இரவு பெய்த பலத்த மழையின் காரணமாக இந்நிலையத்தின் கட்டடம் சேத மடைந்துள்ளது.

[1981 ஜனவரி 24

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு பல்வேறு கட்டடங்கள் இருந்து வருகின்றன. ஒரு கட்டடம் பழுதடைந்தால் மற்ற கட்டடங்களில் அந்த அலுவலகத்தை மாற்றி இருக்கலாம். ஆனால் அங்கே இருக்கின்ற டாக்டர்கள் நகரத்திற்குப் போய்விடவேண்டும் என்ற தவறான எண்ணத்தில் செய்துவிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் அரசாங்கம் உடனடியாக மாற்ற நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்தக் கட்டடம் 6 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தடவை பலத்த மழை காரணமாக போளூர் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. பின்னர் ஓரளவுக்கு செம்மைப் படுத்தப்பட்டு மீண்டும் பழைய இடத்திலேயே கொண்டு வரப்பட்டது. இந்த முறை பலத்த மழையின் காரணமாக மீண்டும் பழுதடைந்தது. அதை பழுதுபார்ப்பதற்கு 2·95 இலட்சம் ரூபாயில் ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டு அதற்காக மாவட்ட மருத்துவ அதிகாரி அவர்கள் பரிந்துரை அனுப்பி இருக்கிறார்கள். அது உடனடியாக நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுத்து, நல்ல கட்டடத்தை அமைத்து அந்த மருத்துவ மனையை மீண்டும் இயங்கச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, அங்கே புதிய கட்டடம் கட்டுவதை நான் வரவேற்கிறேன். இருப்பினும், ஏற்கனவே அங்கே பல்வேறு குடியிருப்புகள் இருப்பதால் அந்த மருத்துவ மனையை அங்கே வைத்துக் கொள்ளலாம். சிரமம் ஏதும் இருக்காது. ஆகவே, அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த மருத்துவமனையை அங்கே அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் யோசனையை ஏற்றுக்கொண்டு, முதலில் அங்கே கொஞ்ச நாள் வைத்துக்கொண்டு இருந்தோம். அந்த மருத்துவமனை இயங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து இருந்தோம். ஆனால், நோயாளிகளே அங்கே வரவில்லை. நோயாளிகள் அந்தக் கட்டடத்திற்குள் வந்து படுத்துக்கொள்ள பயப்படுகிறார்கள். இரண்டு மூன்று மாதங்கள் வைத்திருந்து பார்த்தோம். எந்த நோயாளியும் வராததால் அதை போளூர் நகரில் உள்ள பழைய மருத்துவமனைக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு, இப்போது, அங்கே நோயாளிகள் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். இப்போது அங்கே ஒரு புதிய மருத்துவமனைக் கட்டடம் 3 இலட்ச ரூபாய் செலவில் கட்ட இருக்கிறோம். அது கட்டி முடிக்கப்பட்டால் அந்தக் கட்டடத்தில் அந்த மருத்துவ மனை மீண்டும் அமைக்கப்படும்.

1981 ஜனவரி 24]

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, இந்தத் தொழுநோய் தடுப்புப் பிரிவு எல்லாத் தாலுக்கா மருத்துவ மனைகளிலும் செயல்படுகிறதா ? ஆம் எனில், தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவிடைமருதூர், நன்னிலம்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு பூராவும் உள்ள தொழுநோய் பிரிவு பற்றி இப்போது கேட்க முடியாது. வடாற்காடு மாவட்டத்தைப் பற்றி இருந்தால் கேட்கலாம்.

சங்கராபுரம் மருத்துவமனை.

*வினா எண். 37—திரு. சே. கலிதீர்த்தான் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் அரசாங்க மருத்துவமனைக்கு பெண் டாக்டர் நியமிக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் விரைவில் நியமிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :

(அ) ஆம்.

(ஆ) கூடுதல் மருத்துவ அலுவலர்(Additional Medical Officer பணியிடத்திற்கு ஒப்புதல் வழங்கிய பின்னர் நியமிக்கப்படுவார்.

திரு சே. கலிதீர்த்தான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைச் செய்ய எவ்வளவு காலம் ஆகும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, 16 அடிஷனல் மெடிகல் ஆபீசர் போஸ்ட்டுகள் கூடுதலாக நியமிக்க வேண்டும் என்று டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீசஸ் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு, அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அந்தப் பரிந்துரையின் அடிப்படையில் மிக விரைவில் நாம் அந்தப் பதவிகளை நிறைவுபடுத்த இருக்கிறோம். அதே நேரத்தில், சர்வீஸ் கமிஷன் மூலம் புதிதாக 1,400 மருத்துவர்களை செலக்ட் செய்ய இருக்கிறோம் விரைவில் அந்தப் பணி முடிக்கப்படும். அதற்குப் பிறகு இந்தப் பற்றாக்குறை இருக்காது என்று அரசாங்கம் கருதுகிறது.